## பிரெக்சிட், டிரம்ப் வெற்றி போன்ற அரசியல் அதிர்ச்சிகள் குறித்து துணைப் பிரதமர் தர்மன்

# ‘சமுதாய மாற்றங்களே காரணம்’

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியது (பிரெக்சிட்), டோனல்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராகத் தேர்வு பெற்றது போன்ற எதிர்பாரா அரசியல் நிகழ்வுகள் அதிர்ச்சி அளிப்பதாக இருக்கலாம். ஆனால், இவை யாவும் நீண்டகாலமாக சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் உருவானவை என்று துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம் கூறியுள்ளார்.

இவற்றுக்கு வருவாய்த் தேக்கம், சமுதாயத்தில் முன்னேற்றம் குறைந்து வருவது, நாம் அனைவரும் ஒன்று என்ற உணர்வு சமுதாயத்தில் அழிந்து வருவது, அரசியலும் ஊடகங்களும் ஒரே திசையில் செல்வது என நான்கு போக்குகளைச் சுட்டினார்.

“இந்தப் போக்கு வளர்ந்த நாடுகளிலேயே மிகவும் கவலை தரும் வகையில் அதிகரித்து வருகிறது,” என்று அவர் விளக்கினார்.

“இதில் வியப்பு என்னவெனில், சமுதாயத்தில் ஏற்படும் இந்த மாற்றங்கள் அரசியலிலும் எதிரொலிப்பதற்கு இவ்வளவு காலம் எடுத்தது தான்,” என்று அவர் கூறினார்.

உலக அரசியலில் ஏற்படும் அதிகார மாற்றங்கள், அதனால் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை பற்றி லீ குவான் இயூ பொதுக் கொள்கை ஆய்வுக் கழகத்தில் நேற்று உரையாற்றிய திரு தர்மன் மேற்கண்டவாறு கூறினார்.

சென்ற ஆண்டின் நிகழ்வுகள், உலகமயமாதல், அனைத்துலக ஒத்துழைப்பு குறித்து கவலையான மனப்பான்மையைத் தோற்றுவித்துள்ளபோதும் சரியான உள்நாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்தால் அதைச் சரிசெய்யலாம் என்றார்.

இதற்கு உதாரணமாக, சிங்கப்பூர், சுவீடன் நாடுகளில் நடுத்தர வருவாய் ஊழியர்களின் வருமானம் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளதைவிட அதிகமாக உயர்ந்து இருப்பதைத் திரு தர்மன் சுட்டினார்.

மாறாக, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் ஊழியர்களின் வருமானம் தேங்கி நின்றுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அடுத்ததாக, வளர்ந்த நாடுகளில் முன்னேறும் வாய்ப்புகள் குறைந்து வருவதைச் சுட்டிய திரு தர்மன், கீழ்நிலையிலிருந்து வாழ்க்கையைத் தொடங்குவோர் தாங்கள் முன்னேறும் வாய்ப்பு முன்பிருந்ததைவிடக் குறைந்திருப்பதை உணர்ந்துள்ளனர் என்றார்.

மூன்றாவதாக, மக்கள் தற்போது ‘நாம்’ என்ற ஒற்றுமை உணர்வுடன் சிந்திக்காமல் ‘நமக்கு எதிராக அவர்கள்’ என்ற மனப்போக்குடன் சிந்திக்கின்றனர் என்ற அவர், பணக்கார–வசதி குறைந்த, நகர–கிராமப்புற மக்களிடையே இருக்கும் பிரிவு மனப்பான்மையையும் சுட்டினார். இறுதியாக, மக்களின் ஒரு சார்பு நிலையை வலியுறுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் செய்திகளைப் பரப்புவதைக் குறிப்பிட்ட அவர், இதை எதிர்கொள்ள நான்கு வழிகளைக் கோடிகாட்டினார்.

அதில் முதலாவது, பின்தங்கி இருக்கும் நகரங்கள் மீது கவனம் செலுத்துவது. இரண்டாவதாக, மக்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் வாழ்க்கைத் தொழிலை புதுப்பித்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்க உதவுவது. மூன்றாவதாக, அக்கம்பக்க, நகரமயத் திட்டமிடுதலானது மக்கள் ஒருவருக்கொருவர் கலந்துறவாட ஊக்குவிக்கும்படி இருக்கவேண்டும். இறுதியாக, மைய அரசியலில் நேர்மையையும் தொலைநோக்குப் பார்வையையும் கொண்டுவரவேண்டும் என்று துணைப் பிரதமர் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.